**FIRST INFORMATION REPORT** | **TAMIL NADU POLICE**
முதல் தகவல் அறிக்கை | INTEGRATED INVESTIGATION FORM-I
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8035295

1. District : மாவட்டம் தஞ்சாவூர் PS: காவல்நிலையம் VAAC தஞ்சாவூர் Year: ஆண்டு 2017 FIR No.: மு.த.அ. எண் 8/17 Date: நாள் 05.10.2017

2. (i) Act சட்டம்: Sec. 7 of Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 05.10.2017 at 10.30 hrs

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் complainant arrived VAAC office - 5.10.17 at 12.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் FIR registered 5.10.17 at 13.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written- Typed in Computer

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கிழக்கு, 30 K.M பாபநாசம் வட்டாட்சியர் அலுவலகம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N. அன்பழகன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o. நடராஜன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 27/17 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி கருப்பசாமி கோவில் தெரு வீரமாங்குடி, பாபநாசம் தாலுக்கா தஞ்சாவூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி. ராணி, வட்டாட்சியர், பாபநாசம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான், 05.10.2017ம் தேதி காலை 12.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது பாபநாசம் தாலுக்கா, வீரமாங்குடி கருப்புசாமி கோயில் தெருவைச் சேர்ந்த திரு.அன்பழகன் த/பெ.நடராஜன் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர், N.அன்பழகன், த/பெ.நடராஜன், கருப்புசாமி கோவில் தெரு, வீரமாங்குடி, பாபநாசம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம். பெறுநர், லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, தஞ்சாவூர், அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 10ஆம வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும், ஊராட்சி வளர்ச்சித்துறையிலும் ஒப்பந்தகாரராக செயல்படுவதற்கு Solvency Certificate பெறுவதற்காக 18.09.2017ந் தேதியன்று வருவாய் வட்டாட்சியர், பாபநாசம் அவர்களிடம் ரூ,3,00,000/-க்கு சொத்து மதிப்பு சான்று (Solvency Certificate) வழங்கக் கோரி மனு கொடுத்தேன். எனது மனு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

N. [signature] 5/10/17

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 5/10/17
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

5/10/17

Name: பெயர் ............................
Rank: நிலை .................... No. எண் ..........

* GCP-240-34(Type 2) 90,000 Cps 21.3.16(HCL-12)p.2

தொடர்பாக அறிக்கைக் கேட்டு எனது மனு வீரமாங்குடி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அய்யம்பேட்டை வருவாய் ஆய்வாளருக்கு அனுப்பினார்கள். கிராம நிர்வாக அலுவலர் எனது சொத்து சம்பந்தமாக விசாரணை மேற்கொண்டு அவரது அறிக்கையை 19.09.2017 அன்றும், வருவாய் ஆய்வாளர் அவரது அறிக்கையை 22.09.2017ந் தேதியன்றும் தந்தார்கள், அவற்றை நானே 22.09.2017 தேதியன்றே வட்டாட்சியர் அலுவலகத்தில் கொண்டு போய் கொடுத்தேன். எனது மனு தொடர்பாக, நான் அரசுக்கு செலுத்தவேண்டிய கட்டணத் தொகை ரூ.1,200/-ஐ பாபநாசம் வட்டாட்சியர் அலுவலகத்தில் செலுத்துச்சீட்டு மூலம் 25.09.2017 அன்று செலுத்திவிட்டேன். என் மனு தொடர்பாக பாபநாசம் வருவாய் வட்டாட்சியர் திருமதி.ராணி அவர்களை இரண்டு, மூன்று முறை வட்டாட்சியர் அலுவலகத்தில் சந்தித்தபோது, பார்க்கலாம் என்று சொல்லிவந்தார். நேற்று 04.10.2017ம் தேதி மதியம் 3 மணியளவில் பாபநாசம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு எனது மனு சம்மந்தமாக விசாரிக்க சென்றபோது, அலுவலத்தில் வட்டாட்சியர் இல்லை, அவரைப்பற்றி விசாரித்தபோது, துக்கத்திற்கு சென்றுள்ளதாக கூறினார்கள். இன்று காலை வந்து பார்க்கும்படி தெரிவித்தார்கள். அதனால் இன்று 05.10.2017ம் தேதி காலை 10.30 மணியளவில் பாபாநாசம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்றேன், வட்டாட்சியர் அவர்களை அவரது அலுவலக அறையில் நான் சந்தித்தபோது, எனது மனு சம்மந்தமாக என்னிடம் பேசினார். எனக்கு சொத்து மதிப்பு சான்று வழங்க ரூ.3000/- தனக்கும், வெளியில் நிற்கும் அலுவலக உதவியாளருக்கு ரூ.500/- பணம் கொடுக்கவேண்டும் என்று கூறினார். மேலும் எனது மனுவினை அலுவலக உதவியாளரை வரச்சொல்லி சீல்போடச்சொல்லி கொடுத்தனுப்பினார். நான் பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு அவரது அலுவலக அறையைவிட்டு வெளியில் வந்துவிட்டேன். அப்போது வட்டாட்சியருக்கும் எனக்கும் நடந்த உரையாடலை எனது கைபேசியில் வீடியோ எடுத்துள்ளேன். அவர் கேட்கும் கையூட்டு பணத்தை கொடுத்து சொத்து மதிப்பு சான்றை பெறுவதற்கு எனக்கு விருப்பம் இல்லை. அதனால் மேற்படி வட்டாட்சியர் திருமதி.ராணி மீது புகார் மனு எழுதி அவர் தனக்கும், அலுவலக உதவியாளருக்கும் கேட்ட ரூ.3500/- பணத்தை ஏற்பாடு செய்து கொண்டு வந்துள்ளேன், எனது புகாருடன் நான் பாபநாசம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கொடுத்திருந்த மனுவின் நகல், கட்டணம் ரூ.1200/- செலுத்திய செலுத்துச்சீட்டின் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். இத்துடன் என்னுடைய செல்போனையும் தங்களிடம் ஆஜர்படுத்துகிறேன். எனக்கு சொத்துமதிப்பு சான்று வழங்க, என்னிடம் கையூட்டு கேட்ட மேற்படி பாபநாசம் வட்டாட்சியர் திருமதி.ராணி மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) N.Anbalagan. 5/10/17.

அம்மா,

05.10.2017 ந் தேதி காலை 12.00 மணிக்கு நான் அலுவலகத்தில் இருந்தபோது திரு.N.அன்பழகன், த/பெ.நடராஜன், கருப்புசாமி கோவில் தெரு, வீரமாங்குடி, பாபநாசம் தாலுக்கா,தஞ்சாவூர் மாவட்டம் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அப்புகார் மனு மீது முதல் விசாரணை செய்ய அனுமதி கோரி, காவல் கண்காணிப்பாளர் தென் சரகம், சென்னை ஊ.த.க. அவர்களுக்கு புகார் மனுவின் நகல் மின் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. Sd/- R.Tamilselvi, Inspr. of Police, V&AC, Thanjavur. 05/10/17.

05.10.2017 ஆம் தேதி 12.30 மணிக்கு மேற்படி புகார் மீது முதல் விசாரணை மேற்கொள்ள கிடைக்கப்பெற்ற குறிப்பாணை PE.332/2017/REV/TH -ன்படி முதல் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. Sd/- R.Tamilselvi, Inspr. of Police, V&AC, Thanjavur. 05/10/17.

முதல் விசாரணையில் மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்களை பரிசீலணை செய்தேன். பின்பு மேற்படி மனுதாரர் ஆஜர்படுத்திய தனது Vivo V.3 செல்போனில் பதிவு செய்யப்பட்டிருந்த, மனுதாரருக்கும், எதிரிக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் விவரங்கள் வீடியோ பதிவு செய்யப்பட்டிருந்ததை, பார்த்த பிறகு, எனது அலுவலக கணிணியில் மேற்படி வீடியோ ஆதாரத்தை பதிவிறக்கம் செய்த பிறகு, செல்போனை மனுதாரரிடம் ஒப்படைக்கப்பட்டது. பதிவிறக்கம் செய்யப்பட்ட வீடியோ ஆதாரத்தை, ஒரு CDயில் பதிவிறக்கம் செய்தேன். மேற்படி வீடியோவில் எதிரி புகார்தாரரிடம் லஞ்சம் கேட்டதற்கான முகாந்திரம் இருந்தது. இது குறித்து உரிய தகவல் காவல் கண்காணிப்பாளர் தென் சரகம், சென்னை ஊ.த.க. அவர்களுக்கு தெரிவித்தும், மேற்படி புகார் மனு மீது 05.10.2017 ஆம் தேதி 13.00 மணியளவில் தஞ்சாவூர் V&AC. Cr.No.08/2017 u/s 7 of P.C. Act, 1988 - ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. Sd/- R.Tamilselvi, Inspr. of Police, V&AC, Thanjavur. 05/10/17.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகள், வீடியோ பதிவிறக்கம் செய்யப்பட்ட CD ஒன்றையும் இணைத்து கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தஞ்சாவூர் @ கும்பகோணம் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல்தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

Inspr of Police
V&A, Thanjavur
05/10/17